REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: பங்குனி 19உ வெள்ளி (1—4—55) ★ ★ வெளியூர்: பங்குனி 20உ சனி (2—4—55) [இதழ் 248

இந்தி வெறி பேயுரு எடுக்கிறது!

புதுடில்லி, மார்ச் 31—

மத்திய அரசாங்க ஊழியர்கள் கூடிய சீக்கிரம் இந்தி மொழி பயிற்சி பெற்றாக வேண்டும் என்று கூறப்பட்டிருக்கின்றனர்.

எந்தவிதத்திலும் அவர்கள், வரும் 1965 ஜனவரி 26-ந் தேதிக்குள் இந்தி மொழியினைக் கட்டாயமாகப் பயில வேண்டும்.

அந்த தேதிக்குப் பிறகு அரசியல் சட்டத்தில் கண்டுள்ளபடி, மத்திய அரசாங்கம், உத்தியோகக் காரியங்களுக்கு இந்தி மொழியினை உபயோகிப்பார்கள்; என்றாலும் அதற்கு முன்கூட்டியே கூட, குடியரசுத் தலைவர், இப்போதிருக்கும் ஆங்கிலத்துடன் இந்தி மொழியையும் சேர்த்து உத்தியோக காரியங்களுக்கு உபயோகிக்குமாறு உத்தரவிடக்கூடும் என்று தெரியவருகிறது.

இந்தோனேஷியாவில் இந்தியவியாபாரச்சரிவு

'மதவெறியர்கள்' அட்டகாசம்!

6,000 வீடுகள் தீக்கிரை; 20,000 மக்கள் தவிப்பு

ஜகார்தா, மார்ச் 31—

தெற்கு செலிபேஸ் தீவில், 'பயங்கர மதவெறி கலகக்காரர்'கள் சுமார் 6,000 வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்திக் கொள்ளையிட்டிருக்கின்றனர். அந்த வீடுகள் எரிந்து சாம்பலானதின் விளைவாக 20 ஆயிரம் பேர் வீடின்றித் தவிக்கின்றனர்.

இந்தப் பிரதேசத்தின் சரித்திரத்திலேயே இதுவரை இவ்வளவு பெரிய 'தாக்குதலை' எவரும் நடத்தியதில்லையாம். மார்ச் 17-ந் தேதி முதல் மார்ச் 21-ந் தேதி வரையிலும் கொளுத்தப்பட்ட தீ கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருந்ததாம்!

பின்னர், அந்த 'பயங்கர மதவெறி கலகக்காரர்'கள், தீயினால் எரிந்து சாம்பலாகாமல் மிச்சப்பட்டிருந்தவற்றைக் கொள்ளையிட்டுச் சென்றனராம்.

அந்தக் கொள்ளையரை எதிர்த்துப் போராடுவதற்கு அதிகாரிகளுடன் சுமார் ஒரு லட்சம் மக்கள் ஒத்துழைத்தனராம்.

கொள்ளையிடப்பட்ட பகுதியில் தப்பித்துக்கொள்ள முடியாமல் தவித்தவர்களையும், அந்தக் கொள்ளையர்கள் தூக்கிச் சென்றுவிட்டனராம்.

இந்தோனேஷியாவை முஸ்லிம் நாடாக்கப் பிரதிக்ஞை செய்துகொண்டுள்ளவர்கள் இந்தப் பயங்கரவாதிகள்; ஆனால், இவர்களில் பெரும்பாலானோர் கொலை, கொள்ளை வெறியாட்டத்தில் களிப்புறுகிறவர்களாம்!

இந்தியாவில், இரும்புக் கனிச் சுரங்கங்களின் 1955 ஜனவரி திங்கள் உற்பத்தி அளவு 3,64,000 டன்னாகும்.

அமெரிக்காவுக்கு அச்சுறுத்தல்?

குவெமாய், மட்சு ஆகிய தீவுகளை விட்டு சியாங் படைகளை வெளியேற்றிவிட வேண்டுமென அமெரிக்காவை பிரிட்டன், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, கனடா ஆகிய நாடுகள் வற்புறுத்தி வருகின்றனவாம். அத்தீவுகளைப் பாதுகாக்க இனிமேல் தங்களால் முடியாதெனவும் அவை தெரிவித்துள்ளனவாம்.

கைத்தறி விற்பனை

ரூ. 2-க்கு மேல் துணி வாங்குவோருக்கு சலுகை

பம்பாய், மார்ச் 31—

கைத்தறித் துணிகள் சில்லறை விற்பனை சம்பந்தமாக, இரண்டு ரூபாயும், அதற்கு மேலும் விற்கப்படும் துணிகளுக்கு 'ரிபேட்' அளிக்க மத்திய சர்க்கார் முடிவு செய்துள்ளார்களாம். இம்முடிவு உடனடியாக அமுல் நடத்தப்படும் எனவும் தெரிய வருகிறது.

சேராவிட்டாலும் தப்ப முடியாதாம்!

"உலகில் மற்றப் பகுதிகளில் யுத்தம்மூண்டால்இந்தியா அதில் கலந்துகொள்ளாது; ஆனால் யுத்தத்தின் விளைவுகளிலிருந்து இந்தியா தப்பமுடியாது," என்று, மக்கள் சபையில் பண்டித நேரு அறிவித்துள்ளார்.

மட்ட ரகப் பொருட்கள்! சீரற்ற மேற்கட்டுகள்!

உபயோகிப்போர் விரும்பாத ஆடைகள்!

நாணயமற்ற வியாபார நடைமுறை

ஜப்பான் பாராட்டு பெறுகிறது

ஜகார்தா, மார்ச் 30—

மட்ட ரகமான ஆடைகள், அவ்வாடைகளை சீரற்ற முறையில் கட்டுவது, உபயோகிப்பவர்களுக்குப் பிடித்தமற்ற முறையில் துணிகளைத் தயாரிப்பது, நாணயமில்லாத வியாபார நடைமுறையை மேற்கொள்ளுவது போன்ற காரணங்களினால், கிழக்கத்திய நாடுகளில் இந்தியாவின் ஏற்றுமதி வியாபாரம் சரியத் தொடங்கி இருக்கிறது. அதே நேரத்தில், ஆசியாவில் வியாபாரத் துறையில் இந்தியாவுடன் போட்டியிடும் நிலையில் உள்ள ஜப்பானின் ஏற்றுமதி வியாபாரம் முன்னேறிக்கொண்டு இருக்கிறது.

இந்தியாவிற்கும் இந்தோனேஷ்யாவிற்கும் சிறந்த நட்புறவு இருந்தும்கூட, அந்நாட்டில் இந்தியப் பொருட்களை வாங்குவதில் அதிருப்தியும், ஜப்பானுக்கும் அந்த நாட்டிற்கும் ஏற்கனவே ஏற்பட்ட பகையின் தீவிரம் குறையாதிருந்தும், ஜப்பான் பொருட்களுக்கு அங்கு ஆதரவும் இருந்து வருகின்றன. பொருட்களின் உயர்வும், வியாபார முறையில் மேற்கொள்ளப்படும் தன்மையுந்தான் இதற்குக் காரணம்.

1954-ம் ஆண்டு முதல் ஒன்பது மாதங்களில் இந்தோனேஷியா இறக்குமதி செய்த பொருட்களில், நாற்பதில் ஒரு பகுதி மட்டுமே இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது.

ஆசியப் பகுதியிலிருந்து, சென்ற ஒன்பது மாதங்களில் இந்தோனேஷியா 269,80,00,000 (இந்தோனேஷிய) ரூபாய்க்கு பொருட்கள் இறக்குமதி செய்திருக்கிறது. இதில் 5 சதவிகிதத்திற்குக் கொஞ்சம் கூடுதலாக இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது.

இந்தக் குறைந்த அளவு வியாபாரம்கூட ஏற்றுமதியும் இறக்குமதியும் சரிக்கட்டுவதாக இல்லை. 1954 ஜனவரி முதல் செப்டம்பர் வரை இந்தியாவிற்கு சுமார் 25 லட்ச ரூபாய் மதிப்புடைய பொருட்களே ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

இந்த ஒன்பது மாதங்களில் 7,10,00,000 ரூபாய் மதிப்புடைய ஆலைத் துணிகளும், 5,70,00,000 ரூபாய் மதிப்புடைய சணல் பொருட்களுமே இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

(ஒரு இந்திய ரூபாய்க்கு, 2·4 இந்தோனேஷிய ரூபாய் சமம்.)

மேற்கூறிய காலத்தில் அங்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள ஆலைத் துணியின் மொத்த மதிப்பு 161,60,00,000 ரூபாயாகும். அதில் 7,10,00,000 ரூபாயிக்குத்தான் இந்தியாவிலிருந்து ஆலைத் துணி இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. சலவை செய்யப்படாத ரகம் நீங்கலாக மற்ற ஆலைத் துணி அனைத்தும் ஜப்பானிலிருந்து, ஜப்பானுக்கும்—இந்தோனேஷியாவிற்கும் சிக்கல் நீடித்து வரும் நிலையிலேயே—இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது.

சில ரகத் துணியில் விலை சலுகை இந்திய ஆலைத் துணிகளுக்கு வழங்கப்பட்டு இருந்தும்கூட, உபயோகப்படுத்தும் மக்களின் மனதைத் திருப்திபடுத்தும் வகையில் ஜப்பான் ஆலை அரசுகள் ஆடை தயாரிப்பில் எடுத்துக் கொள்ளும் அக்கறையினால், அவர்களுடன் வியாபாரம் செய்வதைத்தான் இந்தோனேஷிய வியாபாரிகள் விரும்புகின்றனர்.

"நான் ஒரு ஜப்பானிய ஆலைக்குள் சென்று, கோரிய 24 மணி நேரத்திற்குள், 12 மாதிரி ஆடைகளைப் பெற்றேன், குறைந்த தேவையாக இருக்

(4-ம் பக்கம் பார்க்க)

11 வயது சிறுமியை மணந்த 60 வயது வாலியர்!

பஞ்சாப் சீக்கியர்களின் தீராக் கோபம்!

கோலாலம்பூர், மார்ச் 30—

மலாய செலாங்கூரில் இருக்கும் தோட்டக் காட்டுப் பாதுகாவலனாக இருந்துவரும் 60 வயதுடைய சீக்கியர் ஒருவர், 11 வயதுடைய வேறு ஒரு இந்தியப் பெண்ணை, ரவாங் சீக்கியக் கோயிலில் மணம் செய்துகொண்டார். இத்திருமணம் அங்குள்ள சீக்கியர்களின் தீராக் கோபத்தை மூட்டிவிட்டிருக்கிறது.

சீக்கிய மதச் சட்டப்படி மணப்பெண்ணின் வயது 18 அல்லது 19 இருக்கவேண்டுமெனவும், அதை மீறி நடக்கும் மணத்திற்கு அனுமதி கொடுத்ததைக் கண்டித்து, மேற்படி கோயில் நிர்வாகக் குழுவிற்கு, சீக்கியர்கள் தங்கள் கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர்.

புது மணத் தம்பதிகள், நகரை அடுத்துள்ள தோட்டக் காட்டிற்குச் சென்றுவிட்டனர்.

மாமனாக வந்து சிவபெருமான் வழக்குரைத்த காதையா?

திருப்பதி வேங்கடாசலபதியை சாட்சியம் கூறக் கோரிய வாதி

திண்டுக்கல் நீதிமன்றத்தில் சம்பவம்

திண்டுக்கல், மார்ச் 31—

திருப்பதி வெங்கடாசலபதியை நீதிமன்றத்திற்கு வருமாறு நீதிபதி உத்திரவிட வேண்டுமென பாகப் பிரிவினை வழக்கொன்றில் வாதி ஒருவர் கோரினாராம்!

பழனி வட்டம் கொண்டாரங்கி கீரனூர் கிராமத்தைச் சேர்ந்த, கருப்பண்ண கவுண்டர் என்பவருக்கும், முத்துசாமி கவுண்டர் என்பவருக்குமிடையே பாகப் பிரிவினை வழக்கொன்று, நீதிபதி கிருஷ்ணன் நம்பூதிரி பாட் என்பவர் முன் நடைபெற்று வருகிறது. வாதியான முத்துசாமி கவுண்டர் கையில் பூமாலைகளுடன் நீதிமன்றத்திற்கு வந்து தாங்கள், திருப்பதி வெங்கடாசலபதிக்கு கிரமக் கடப்பாடுடையவர்களாயிருப்பதால், நீதிபதி, வெங்கடாசலபதியை நீதி மன்றத்திற்கு வருமாறு உத்தரவிட வேண்டுமெனக் கோரினாராம்.

இதுகேட்டு நீதிமன்றமே ஆச்சரியத்தில் ஆழ்ந்ததாம்.

இதற்குமுன் எந்த நீதிமன்றத்திலுமே 'தெய்வீக சாட்சியங்கள்' வரவழைக்கப்படாததால், நீதிபதி, வழக்கை ஏப்ரல் 11-ந் தேதிக்கு ஒத்திவைத்தாராம்.

இந்தக் காட்சியைக் காண ஏராளமான பேர் நீதிமன்றத்தில் கூடியிருந்தனராம்.

சென்னை நகரில் ஓடும் சைக்கிள் ரிக்ஷா வண்டிகளில் ஒருவர் மட்டுமே சவாரி செய்யவேண்டும் என்று சென்னை நகர போலீஸ் கமிஷனர் உத்திரவிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்: அறிக்கை—6/55

பதிவுத் தாள் அனுப்புதல்

தேர்தல் நடத்திய கிளைக் கழகங்கள் பதிவுத் தாளை 5—4—55-ம் நாளுக்குள் தலைமைக் கழகத்துக்கு அனுப்பிவைத்துவிட வேண்டும். அதற்குப் பிறகு வரும் பதிவுத் தாள்கள் இப்பொழுது பதிவு செய்து கொள்ளப்படமாட்டா; அந்தக் கிளைகளின் மாவட்டப் பிரதிநிதிகளுக்குப் பிரதிநிதிச் சீட்டும் அனுப்பி வைக்கப்படமாட்டாது.

மாவட்டப் பிரதிநிதி

சிற்றூர்—பேரூர் (சிறிய-பெரிய பஞ்சாயத்து) கிளைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாவட்டப் பிரதிநிதியைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். சில கிளைகள் ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்திருக்கின்றன. அவர்களில் முதலில் காணப்படும் ஒருவருக்குத்தான் மாவட்டப் பிரதிநிதிச் சீட்டு தலைமைக் கழகத்திலிருந்து அனுப்பி வைக்கப்படும்.

"அறிவகம்" சென்னை. 31—3—55

சி. என். அண்ணாதுரை
பொதுச்செயலாளர், தி. மு. க.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணதுரை

சென்னை 1—4—'55 வெள்ளி

ஒழிக பரீட்சை!

கடந்த ஞாயிறன்று சென்னையில் நடைபெற்ற சென்னை மாநில ஆரம்பப் பள்ளிகளின் ஆசிரியர்-நிர்வாகிகள், நிர்வாகிகள் மாநாட்டில் பல முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

மக்களுக்குக் கல்வி போதிக்கும் பிரச்சினையில், தனிப்பட்ட பள்ளிகளை நடத்தும் நிர்வாகிகள், ஆசிரியர்களது பணி குறிப்பிடத்தகுந்த ஒன்றாகும். 1950—51-ம் ஆண்டுக் கணக்குப்படி, சென்னை மாநிலத்தில், அரசாங்கம் 1,224, நகரசபைகள் 970, மாவட்ட ஆட்சி மன்றங்கள் 8,051, பஞ்சாயத்துக்கள் 892, தனிப்பட்டோர் 9,563 என ஆரம்பப் பள்ளிகளை நடத்தி வருகின்றனர் என்று அந்த மாநாட்டு வரவேற்புரையில் கூறப்பட்டுள்ளது.

இந்தக் கணக்குப்படி பார்த்தால் அரசாங்கம், நகரசபைகள், மாவட்ட ஆட்சி மன்றங்கள், பஞ்சாயத்துக்கள் ஆகிய நால்வகை நிர்வாகங்களும் சேர்ந்து நடத்தும் மொத்தப் பள்ளிகளின் எண்ணிக்கை ஏறத்தாழ தனிப்பட்டோர் நடத்தும் பள்ளிகளின் எண்ணிக்கை அளவுதான் உள்ளது. இந்த விபரங்களே, மாநிலத்தில் ஆரம்பக் கல்வி வளர்ச்சியில் தனிப்பட்டோர் நடத்தும் பள்ளிகளின் பெரும் பங்கினைக் குறித்து எடுத்துக்கூற போதுமானவையாகும்.

ஆரம்பக் கல்வி வளர்ச்சியில் அத்தகைய முக்கியமானதோர் இடத்தைப் பெற்றுள்ள தனிப்பட்டோர் பள்ளி நிர்வாகிகள், மாநாடு ஒன்றில் கூடி நிறைவேற்றியுள்ள தீர்மானங்கள் ஆட்சியாளரது கூர்மையான கவனத்திற்குரியவையாகும் என்றால் மிகையாகாது.

கல்வி பரப்பும் பள்ளிகள், அரசாங்கத்தாலோ அல்லது நகரசபைகள் போன்ற இதர நிர்வாகங்களாலோ ஏற்று நடத்தப்படுவதற்கு முன்னர், வெகு காலமாகவே தனிப்பட்டோர்களால்தான் நடத்தப்பட்டு வந்திருக்கின்றன. அந்த வகையில், 'கல்வி வளர்ச்சி துரிதமாக்கப்பட வேண்டும்; நாட்டு மக்கள் அனைவரும் கல்வி பெற வேண்டும்,' என்ற நல்ல எண்ணங் கொண்ட எந்த ஒரு அரசாங்கமும், ஆரம்பக் கல்வி வளர்ச்சியில், தொல்லைகள் பலவற்றிற்கிடையே தனிப்பட்டோர்புரிந்துவரும் நற்பணிக்கு நன்றி செலுத்தக் கடமையுடையதாகும்.

கல்வித் துறையில் நீண்ட கால அனுபவம் பெற்றுள்ள அந்தத் தனிப்பட்ட பள்ளி நிர்வாகிகள், ஆசிரியர்கள் ஆகியோரது கருத்துக்கள், அரசாங்கத்தால், சுலபத்தில் நிராகரித்து விடக்கூடியதல்ல!

அந்த மாநாட்டில் நிறைவேற்றுள்ள தீர்மானங்களில், உயர்தர ஆரம்பப் பள்ளிகளில் மட்டும் பயிலும் 12, 13 வயதுடைய இளம் மாணவர்களுக்கு அரசாங்கம் நடத்தும் ஈ. எஸ். எல். சி. பரீட்சையை ஒழித்துக்கட்ட வேண்டும் என்பதும் ஒன்றாகும்.

பொதுவாகவே அரசாங்கம் இன்று நடைமுறையில் கொண்டுள்ள பரீட்சை முறைகள் வெகுவான குறைபாடுடையவை என்ற கருத்து, பரவலாக நாட்டில் நிலவத்தான் செய்கிறது.

மாணவர்களது அறிவு வளர்ச்சியையும், தரத்தினையும சோதிக்க அரசாங்கம் நடத்தி வரும் பரீட்சைகள் நல்ல கருவிகள்தான் என்பதை ஏற்றுக் கொள்வதில் மாறுபட்ட கருத்துடைய கல்வி நிபுணர்களும் இருக்கிறார்கள்.

பரீட்சைகள் பற்றி பொதுவான கருத்து மாறுபட்டதாக இருந்தபோதிலும், உயர்தர ஆரம்பப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு எட்டாம் வகுப்பில் அரசாங்கம் நடத்தும் பரீட்சைகள், அந்த வகுப்பில் பயிலும் 12 அல்லது 13 வயதுடைய மாணவர்களின் சக்திக்கு மீறியவை என்ற கருத்தில் மாறுபட்டவர்கள் அதிகமாக இருக்க முடியாது.

ஈ. எஸ். எல். சி. பரீட்சை எழுதவேண்டிய மாணவர்களோ 12 அல்லது 13 வயது மட்டுமே வளர்ந்த சிறுவர்கள்; அவர்கள், அரசாங்கம் நடத்துகிற பரீட்சையில் தோல்வி கண்டால், அதைத் தாங்கிக் கொள்ளும் உள்ளம் அவர்களுக்கு இருக்குமெனவும்எதிர்பார்க்க முடியாது. மேலும் தோல்விகண்டவர்கள் பலர் தொடர்ந்து கல்வி பெற முடியாதவர்களாகிவிடுகின்றனர்.

அது தவிர, உயர்தர ஆரம்பப் பள்ளிகளில் எட்டாம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு மட்டுமே இந்த ஈ. எஸ். எல். சி. பரீட்சை நடத்தப்படுகிறது. உயர்தரக் கலாசாலைகளில், செகண்டரி பள்ளிகளில் எட்டாம் வகுப்புக்குச் சமமான மூன்றாம் படிவத்தில் பயிலும் மாணவர்களுக்கு அரசாங்கம் பரீட்சை நடத்துவதில்லை.

ஒரேதரமான கல்வி பெறும் மாணவர்களில், அவர்கள் கல்வி பெறும் பள்ளிகள் வெவ்வேறாக இருப்பதினால் மட்டுமே இந்த வேறுபாடு காட்டப்படுவது ஒரு சாராருக்கு இழைக்கப்படும் அநீதியுமாகும் என்று துணிந்து கூறுவதற்கு இடமுண்டு.

எனவே, அரசாங்கம், தேவையற்ற வேறுபாட்டையும், இளஞ் சிறுவர்களது — பிஞ்சு உள்ளங்களால் எதிர்நோக்க முடியாத ஈ. எஸ். எல். சி. பரீட்சையை ஒழிக்க வேண்டும் என்று ஆசிரிய-நிர்வாகிகள், நிர்வாகிகள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தை நாம் மனதார ஆதரிக்கிறோம்; தீர்மானத்தை ஆலோசனை செய்து, நடவடிக்கைகள் மேற்கொள்ள அரசாங்கம் முன்வரவேண்டும் என்றும் எதிர்பார்க்கிறோம்.

அந்த மாநாட்டில் நிறைவேற்றுள்ள 'சர்க்கார், ஏழை மாணவர்களை இலவசமாகப் படிக்க வைப்பதற்காக உதவி பெறும் ஆரம்பப் பள்ளிகளுக்குத் தரும் நஷ்டஈட்டுத் தொகையை மாதந்தோறும் தரவேண்டு'மெனக் கோரும் தீர்மானமும் அரசாங்கத்தால் உடனடியாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஆசிரியர்களின் சம்பள உயர்வு பற்றி அந்த மாநாடு மேற்கொண்டுள்ள முடிவையும் அரசாங்கம் ஊன்றிக் கவனிக்குமாக!

பால் பண்ணை ஆராய்ச்சிக் கழகம்

பெங்களூரிலேயே வைத்திருக்கக் கோரிக்கை

மத்திய அரசாங்கப் போக்கிற்கு மைசூர் சட்டசபையில் எதிர்ப்பு

மைசூர் மாநில சட்டசபையில். பெங்களூரில் உள்ள பால் பண்ணை ஆராய்ச்சிக் கழகத்தை மத்திய அரசாங்கம் வடநாட்டிற்கு மாற்றுவது பற்றிய பிரச்சினை காரசாரமான விவாதத்திற்கு உள்ளாக்கியது.

"மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்துடன் ஒத்துழைக்காததே, ஆராய்ச்சிக் கழகம் வடநாட்டிற்கு மாற்றப்படுவதற்கான காரணம் என்று மக்கள் சபையில் கூறப்பட்டிருக்கிறதே, மாநில அரசாங்கம் ஒத்துழைக்கவில்லையா?" என்று கேட்டபோது, 'அப்படி ஒன்றும் இல்லை,' என்று கூறப்பட்டது.

"பிரச்சினை எல்லாம், ஆராய்ச்சிக் கழகத்திற்குத் தேவையான நிலம் சேகரிப்பதில்தான் இருக்கிறது," என்றும் கூறப்பட்டது.

முதன் மந்திரி அனுமந்தையா பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மாநில அரசாங்கம், ஆராய்ச்சிக் கழகத்திற்குத் தேவையான நிலத்தை விலை எதும் தராமல் இலவசமாகவே பெற்றுத் தரவேண்டும் என்று மத்திய அரசாங்கம் எதிர்பார்க்க முடியாது; எப்படியேனும், பண்ணை ஆராய்ச்சிக் கழகத்தை பெங்களூரிலேயே இருக்கச் செய்யவேண்டும் என்பதுதான் மைசூர் அரசாங்கத்தின் எண்ணம்," என்றார்.

சட்டசபையில் பேசிய பல கட்சி உறுப்பினர்களும், கழகம் பெங்களூரிலிருந்து வடக்கே மாற்றப்படும் யோசனையை கண்டித்ததுடன், அது பெங்களூரிலேயே இருக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை மாநில அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரியிருக்கின்றனர்.

காஷ்மீரில் பழுப்பு நிலக்கரி

ஸ்ரீநகரிலுள்ள நிச்ஹமா கரிச் சுரங்கங்களிலிருந்து இதுவரையிலும் 50,000 மணங்கு பழுப்பு நிலக்கரி தோண்டி எடுக்கப்பட்டுள்ளதாம். இந்தக் கரிக்கு இப்போது 'கிராக்கி' ஏற்பட்டிருப்பதால் இன்னும் இவற்றை இப்பிரதேசத்திலிருந்து வெளியே தோண்டியெடுப்பதில் சர்க்கார் தீவிர முயற்சி எடுத்துக் கொண்டுள்ளனராம்.

ரூ. 1½ கோடி செலவு!

1954—55-ம் ஆண்டில், இந்திய சர்க்கார், ஒரு ரூபாய் நோட்டுக்களை அச்சடிப்பதற்கென ரூ. 52.59 லட்சம் செலவிலும், ஒரு ரூபாய்க்கு மேற்பட்ட மதிப்புடைய ரூபாய் நோட்டுக்களை அச்சிட ரூ. 102·60 லட்சம் ரூபாயிலும் விசேட ரகக் காகிதங்கள் வாங்கியிருக்கின்றனர் என்ற தகவலை வரவினை-பாதுகாப்புச் செலவின அமைச்சர் மக்கள் சபையில் தெரிவித்தார்.

இந்தியாவில் தேயிலை உற்பத்தித் தொழில்

சில புள்ளி விவரங்கள்

இந்திய தேயிலைத் தொழிலில் சுமார் ரூ. 75 கோடி மூலதனம் போடப்பட்டுள்ளது.

இந்தியாவில் மொத்தம் 6,200-க்கு மேலான தேயிலைத் தோட்டங்கள் இருக்கின்றன.

அங்கு, சுமார் 7,88,000 ஏகர் நிலத்தில் தேயிலை பயிரிடப்படுகிறது.

ஆண்டுதோறும் சுமார் 63 கோடி பவுண்டு தேயிலை உற்பத்தியாகிறது.

தேயிலைத் தோட்டங்களில் மட்டும் சுமார் 10 இலட்சம் பேர் வேலை செய்கின்றனர்.

இந்தியாவில் அதிகமான வேலை தரக்கூடிய ஒரே தொழில் தேயிலை உற்பத்திதான்.

இதுவன்றி, தேயிலை வர்த்தகம், இன்னும் ஏராளமான பேர்களுக்கு வேலை தருகிறது.

இந்தியாவில் வாழும் மக்கள் ஆண்டொன்றுக்கு சுமார் 18 கோடி பவுண்டு தேயிலை உபயோகிக்கிறார்கள்—அதாவது, ஒருவர், ஒரு ஆண்டிற்கு அரை பவுண்டு தேயிலை வீதம் உபயோகிக்கிறார்.

1953—54-ம் ஆண்டில் மட்டும் இந்தியாவிலிருந்து 47 கோடி பவுண்டு தேயிலை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

இது, இந்தியாவின் மொத்த உற்பத்தியில் மூன்றில் இரண்டு பங்கிற்கும் அதிகமாகும்.

பிரிட்டன், அமெரிக்கா, கனடா, எகிப்து, துருக்கி, சூடான், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, ஈரான், மற்றும் பல நாடுகளுக்கு இந்தியத் தேயிலை ஏற்றுமதி செய்யப்படுகிறது.

1953—54-ல் மட்டும் வெளிநாட்டு செலாவணி வகையில் இந்தியத் தேயிலை ரூ. 102 கோடி சம்பாதித்தது.

1953—54-ல், இந்திய அரசாங்கத்திற்கு தேயிலைத் தொழில் மூலம் ஏற்றுமதி வரியாக, ரூ. 11·6 கோடியும், மத்திய சுலால் வரியாக ரூ. 2 கோடியும் கிடைத்துள்ளது.

அதுவன்றியில், மாநிலங்கள் விதிக்கும் விற்பனை வரி, விவசாய வரி முதலியனவும் அரசாங்கத்திற்குக் கிடைத்துள்ளது.

ஒட்டுப் பலகை, மண்பானை, நிலக்கரி, சிமெண்டு, உரம், தேயிலை இயந்திரம் ஆகிய தொழில்களுக்கும், தேயிலைத் தொழில் உதவுகிறது.

சீனு, ஜப்பான், ரஷியா நீங்கலாக உள்ள எஞ்சிய உலக நாடுகள் அனைத்திற்கும் ஆண்டொன்றுக்குத் தேவையெனக் கணக்கிடப்பட்டுள்ள 120 கோடி பவுண்டு தேயிலையில் 50 சதவிகிதம் இந்தியா தருகிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்

ரூ. 7,200 கோடி செலவிட யோசனை

புதுடில்லி, மார்ச் 28—

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கென ரூ. 7,200 கோடி செலவிட திட்டமிட வேண்டும்; ஒரு கோடி பேருக்கும் அதிகமாக வேலை கிடைப்பதற்கும், நாட்டு மக்களின் சராசரி வருமானத்தை 30 சதவிகிதம்—அதாவது ஆண்டொன்றுக்கு ரூ. 320 என்று உயர்த்துவதற்கும் அத்திட்டம், அவ்வளவு பிரம்மாண்டமான அளவில்தயாரிக்கப்பட வேண்டும்."

இந்த யோசனையை இந்திய தொழில் வர்த்தக சபைகளின் சங்கம் வெளியிட்டுள்ளது.

சங்கம் தயாரித்துள்ள இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட நகல் ஒன்றில் இந்த யோசனை, பரவலாக விவாதிக்கப்படுவதற்காகக் கூறப்பட்டுள்ளது.

இரண்டாம் திட்டத்தின் இரட்டை நோக்கங்களாக, உற்பத்தி தொழில் எண்ணிக்கையை அதிகரிப்பதும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுமாகவே இருக்க வேண்டும் என்று அந்த யோசனையில் கூறப்பட்டிருக்கிறது.

"இந்த நிலையை அடைவதற்கு; பொருளாதார 'மூலதன அடிப்படை'யை உறுதிப்படுத்த முயற்சித்தாக வேண்டும்; அதாவது இப்போதைய முதல் ஐந்தாண்டுத் திட்டமான விவசாய அபிவிருத்தித் திட்டம் என்பதற்கு நேர் எதிராக, இரண்டாம் திட்டம், ஒரு தொழில், போக்குவரத்துத் திட்டமாக அமைந்தாக வேண்டும்," என்று கூறப்படுகிறது

தொழில் திட்டமாக இருக்க வேண்டும் என்று வற்புறுத்துவதற்குரிய இரு காரணங்களில் முதலாவதாக, உற்பத்தித் தொழில் நேரடியாக பலருக்கு வேலை தருவது மட்டுமின்றி, பாங்கி இன்சுரன்ஸ், போக்குவரத்து, வர்த்தகம் முதலிய துறைகளிலும் மேலும் வேலைக்கான வழிகளை விருத்தி செய்யக்கூடும் என்பதையும், இரண்டாவதாக, அவர்களுக்கு நிரம்ப வருமானத்தையும் தரக்கூடும் என்பதையும் அறிக்கை சுட்டிக் காட்டுகிறது.

"தொழிலிலே கூட, கனரக இயந்திரத் தொழில் நிர்மாணிப்பதிலேயே அதிகக் கவனம் செலுத்த வேண்டும்; அதில் இயந்திரங்களை உற்பத்தி செய்யும் தொழில் உள்ளடங்கியதாயிருக்கும்; இந்தத் தொழில் அபிவிருத்தியுடன் போக்குவரத்து அளவும் சமமானதாக வளரவேண்டும்; சுமார் 7,500 மைல் நீள புதிய ரயில் பாதைகள் போட்டாக வேண்டும்," என்றும், வர்த்தக சபைகள் சங்க யோசனை குறிப்பிடுகிறது.

இந்திய அரசாங்கத் திட்டக்குழுவின் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் நகல், சுமார் ரூ. 5,500 கோடி ரூபாய் மட்டும் செலவிட உத்தேசித்திருக்கிறது; திட்டக் குழுவின் நகலைக் காட்டிலும், இது, அதிக அளவு பெரிதுங்கூட என்பது வெளிப்படை!

வெள்ளக் கட்டுப்பாடு திட்டங்கள்

மாநிலங்களுக்கு வட்டியில்லாக் கடன்தர டெல்லி முயற்சி

வெள்ளக் கட்டுப்பாடுத் திட்டங்களுக்காக மாநில அரசாங்கங்களுக்கு வட்டி இல்லாக் கடன் கொடுக்கப்படும் என்று, மத்திய வெள்ளக் கட்டுப்பாடு கூட்டத்தில் திட்ட மந்திரி நந்தா கூறியிருக்கிறார். இக்கடன் 30 ஆண்டுகளில் திரும்பப் பெறப்படும் என்றும் தெரிகிறது.

கரும்பும் அத்தியாவசியப் பொருளாகிறது

1949-ம் ஆண்டின் அத்தியாவசியப் பொருள் கட்டுப்பாடு சட்டத்தின் கீழ், சென்னை சர்க்கார், இப்போது, கரும்பும் ஒரு அத்தியாவசியப் பொருள் என்று பிரகடனம் செய்திருக்கிறது.

இதையொட்டி கரும்பு விலையின் நிர்ணய உத்தரவையும் சர்க்கார் வெளியிட்டுள்ளது. இவ்வுத்தரவு சென்னை மாநிலம் முழுமையிலும் அமுலுக்கு வரவிருக்கிறதாம்.

சென்னை சட்டசபையில்...

★

விவாதித்து என்ன செய்ய?

"தேவையான தகவல்கள், புள்ளி விபரங்கள் கிடைத்ததும், தகுந்த தருணத்தில் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் பற்றி விவாதிக்க சட்டசபைக்கு வாய்ப்புக் கிடைக்கும்," என்று மந்திரி சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

வன்னியகுல க்ஷத்திரியர்கள்

படையாச்சி, கண்டர், வன்னிய கவுண்டர் ஆகிய சாதிகளெல்லாம் 'வன்னியகுல க்ஷத்திரிய' என்ற வகுப்பின் கீழ், சர்க்கார் கல்வி வசதி கொடுப்பது பற்றி எடுத்துக் கொள்ளப்படுவதாகவும், சிக்கல்களையும், தடங்கல்களையும் தீர்க்க இச்சமூகத்தினர் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு பெயர்கள் வைத்துக் கொள்வதினும், பொதுவாக, 'வன்னிய குல க்ஷத்திரியர்' என்று வைத்துக் கொள்ளலாமென்றும் நிதி மந்திரி சுப்பிரமணியம் யோசனை கூறியிருக்கிறார்.

தோழர் கோவிந்தசாமி அவர்கள், உபகேள்வி ஒன்றில், மந்திரி குறிப்பிட்ட சமூகங்களல்லாமல் கச்சிராயர், மழவராயர், நாயகர், ரெட்டியார் என்றும் வன்னியர்கள் அழைத்துக் கொள்ளப்படுவதால், இந்தப் பெயர்களும் பட்டியலில் சேர்க்கப்படுமா என்று கேட்டதுடன், வன்னியகுல மக்கள் ஒருகோடிக்கு மேல் இருக்கிறார்களென்றும் கூறினர்.

நிதி மந்திரி பதிலளிக்கையில், மற்ற சில சாதிகளையும் கூறியது உண்மையாயிருக்கலாமென்றாலும், வன்னியர்கள் ஒரு கோடி பேர் இருக்கிறார்கள் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் கூறியிருக்கிறார்.

"வன்னியர் ஒரு கோடி, அரிசனங்கள் 2½ கோடி, முக்குலத்தோர் 2½ கோடியென்றும் கூறப்படுகிறது; இப்படியெல்லாம் கூட்டிக் கொண்டே சென்றால் வாய்க் கணக்கே 7½ கோடியாகிவிடுகிறது; ஆனால் சென்னை மாநிலம் முழுவதும் கன்னட, மலையாள மாவட்டங்கள் உள்ளிட்ட மக்கள் தொகை 3½ கோடிதான்; எனவே மக்கள் தொகை பற்றி, பிற்பட்ட வகுப்பு 'கமிஷனின்' அறிக்கை வெளிவரும் வரை காத்திருக்கலாம்," என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அரிசனப் பள்ளிகள்

சென்னை மாநிலத்தில் உள்ள அரிசன க்ஷேமலப் பள்ளிகளை கல்வி இலாகாவிடம் ஒப்படைக்க சர்க்கார் எண்ணியிருப்பதாகவும், இதுபற்றி பரிசீலனை நடந்துவருவதாயும், மந்திரி பரமேஸ்வரன் தெரிவித்திருக்கிறார்.

சர்க்கார் மாளிகையில் கஞ்சா செடியா?

சர்க்கார் மாளிகையில் ராஜாஜி மண்டபத்துக்கு அருகில் உள்ள தோட்டத்தில், கஞ்சாச் செடிகள் வளர்க்கப்படுகின்றனவென்று ஒரு புகார் வந்ததாகவும், அதுபற்றி விசாரிக்கப்பட்டு 'புகார் பொய்யானது,' என்று கண்டுபிடிக்கப் பட்டது என்றும் ஸ்தல ஸ்தாபன மந்திரி கூறியிருக்கிறார்.

போலீசாருக்குக் கதர்

"போலீசார் கதர் அணிவதில் தடை கிடையாது; ஆனல் அணிய வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்படவில்லை," என்று நிதி மந்திரி கூறியிருக்கிறார்.

தண்டிக்கப்படவில்லை

"மாற்றியமைக்கப்பட்ட புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தை அமுலாக்கவில்லை என்று எந்த ஒரு ஆசிரியரும் தண்டிக்கப் படவோ அல்லது குற்றம் சாட்டப் படவோ இல்லை," என்று நிதி மந்திரி பதில் அளித்தார்.

ஈய விஷம்: புகார் இல்லை!

"அச்சுத் தொழிலகங்களிலும், 'டைப் பவுண்டரி'களிலும், ஈய விஷத்தால் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டதாக சர்க்காருக்கு புகார் எதும் வரவில்லை," என்று மந்திரி பக்தவத்சலம் குறிப்பிட்டிருக்கிறார்.

1951-ல், சர்க்கார் அச்சகத்தில், சுகாதார பேராசிரியர் இதுபற்றி சுமார் 500 பேர்கள்வரை பரிசோதனை நடத்தினர்; தொழிலாளிகள் பாதிக்கப்பட்டதாக அப்போதும் கூறப்படவில்லை; ஈய விஷத்தால் பாதிக்கப்படும் தொழிலாளருக்கு நஷ்டஈடு, சம்பந்தப்பட்ட விதிகளில் சேர்க்கப் பட்டுள்ளதென்றும் மந்திரி தெரிவித்திருக்கிறார்.

வேலையின்மைக்குப் பரிகாரமாம்!

ஐயாயிரம் முதல் பத்தாயிரம் வரை மக்கள் தொகையுள்ள பஞ்சாயத்து போர்டுகளுக்கு எஸ் எஸ். எல். சி. வரை படித்தவர்களையும். மூவாயிரம் முதல், ஐயாயிரம்வரை மக்கள் தொகையுள்ள பஞ்சாயத்துகளுக்கு நாலாம் பாரம் வரை படித்தவர்களையும், குமாஸ்தாக்களாக்க சர்க்கார் எண்ணியுள்ளதாயும், வேலையின்மையை ஓரளவுக்குப் போக்குவதே இதன் நோக்கம் என்றும், இதனுல் சுமார் 1,000 பேருக்கு வேலை கிடைக்கும் என்றும் மந்திரி இராமசர்மி படையாச்சி கூறியிருக்கிறார்.

மாற்ற முடியாது?

இட அபிவிருத்தி, சாலை அபிவிருத்தி வேலைகள் போன்றவற்றை மாவட்டக் கழக நிர்வாகத்திடம் ஒப்படைக்க உத்தேசமில்லை என்று அமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்திருக்கிறார்.

நல்லதுதானே!

'இவ்வாண்டு இறுதிக்குள்ளாக மாநிலத்திலுள்ள எல்லா நகரப் பகுதிகளிலும், மாவட்டத் தலைமை நகரங்களிலும் பி. சி. ஜி. ஊசி குத்தும் திட்டம் அமுல் செய்யப் பட்டுவிடும்," என்று அமைச்சர் ஏ. பி. ஷெட்டி கூறினர்

தற்போது, கோவையில் இத்திட்டத்தின் கீழ் 1,48,543 பேருக்கு பி. சி. ஜி ஊசி குத்தப் பட்டுள்ளதென்றும் தெரிவித்தார்.

அதுதானே கிடையாது!

கருவாடு மீன்களுக்கு விற்பனை வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கும்படி கோரிக்கைகள் வந்துள்ளனவென்றும், ஆனல் அது தரப் படவில்லை என்றும் அமைச்சர் மாணிக்கவேலர் கூறினர்.

முடிக்காவிட்டால்......!

நில உடைமைப் புள்ளிவிவரச் சேகரிப்பு வேலை வருகிற ஆகஸ்டு திங்களுக்கும் வெகு முன்னரே முடிவு பெற்றுவிடுமென்றும், கிராமக் கட்டத்தில், இவ்வேலையைப் பூர்த்தி செய்ய கிராமக் கர்ணங்களுக்கு 2 மாத காலம் அவகாசம் தரப்பட்டுள்ளதென்றும் அமைச்சர் மாணிக்கவேலர் தெரிவித்திருக்கிறார்.

ஆனல் இவ்வேலையை, குறிப்பிட்ட காலவரையறைக்குள்ளாகவே முடிக்காவிட்டால் அதற்கு இன்ன தண்டனை அளிக்கப்பட வேண்டும்' என்று நிர்ணயிக்கப் படவில்லையெனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

தலைமை ஆசிரியர் மீது நடவடிக்கை?

கும்பகோணம் டவுன் உயர்நிலைப்பள்ளியின் தலைமை ஆசிரியரை இவ்வாண்டு பிப்ரவரித் திங்களிலிருந்தோ, அதற்கு முன்னரோ வேலையிலிருந்து நீக்கிவிட வேண்டுமென நிர்வாகக் குழுவினர் எடுத்து வரும் முயற்சிகளை ஆட்சேபிக்கும் வகையில், மாணவர்களின் பெற்றோர், 'இது விஷயத்தில் சர்க்கார் தலையிட்டு பிரச்சினையைத் தீர்க்கவேண்டு'மென்ற தீர்மானத்தின் நகல் சர்க்காருக்குக் கிடைத்துள்ளதென்றும், ஆனல், தலைமை ஆசிரியர் கல்வி இலாகா டைரக்டருக்கு அப்பீல் செய்து கொள்ள இடமிருப்பதால் தீர்மானத்தின் பேரில் எவ்வித நடவடிக்கையையும் சர்க்கார் எடுக்கவில்லை என்றும் அமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார்.

அப்படி இல்லையாம்!

"வெளி நாடுகளிலிருந்து விவசாயத்துறைக் கருவிகள் எதையும் இறக்குமதி செய்ய சர்க்கார் எவ்வித உத்தரவும் பிறப்பித்ததில்லை," என்று கூறினர் அமைச்சர் பக்தவத்சலம்.

தொழிலாளர் புகார்!

'வைகை அணைத் திட்டத்தின் கீழ் வேலை செய்கின்ற தொழிலாளர்கட்கு, அங்குள்ள கண்டிராக்டர்கள், சர்க்கார் நிர்ணயித்துள்ள கூலியைக்கொடுப்பதில்லை' என்று சபையில் புகார் கூறப்பட்டு, இதேபோலவே இதர பல திட்டங்களிலும் வேலை நடப்பதாகவும், இதனைத் தடுத்து. தொழிலாளர்களுக்கு நியாயமான கூலி கிடைக்கச் செய்வதற்காகச் சர்க்கார் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

இதுபற்றிப்பேசுகையில் அமைச்சர் இராமநாதபுரம் இராஜா, தொழிலாளர்கள் தங்கள் தங்கள் குறைகளை நேரடியாகவே சர்க்காரிடம் தெரிவித்தால் சர்க்கார் அதைக் கவனிக்குமென்றும், அதிகாரிகள்மீது குறிப்பிட்ட புகார்களைத் தெரிவித்தால் அதுபற்றியும் விசாரிக்கப்படுமென்றும் கூறினர்.

தற்போது, சர்க்கார் நிர்ணயித்துள்ள தொழிலாளர் ஊதிய விகிதப்படி, ஆண் ஒருவருக்கு ரூ. 1—4—0-ம், பெண் ஒருவருக்கு ரூ. 0—13—0-ம் தினக் கூலியாகத் தரப்பட வேண்டும்.

அகதிகளுக்குக் கடன்

பர்மா, மலேயா அகதிகளுக்குத் தரப்பட்ட கடனில் ரூபாய் 31,65,362—6—3 வசூலிக்கப்பட்டிருக்கிறதென்றும், கொடுக்கப் பட்ட கடனில் சுமார் ரூ 35 லட்சம் 'திரும்பப் பெறமுடியாத'தென ரத்து செய்யப்பட்டுள்ளதென்றும், இன்னும் வசூலிப்பதற்குப் பாக்கியாக இருந்துவரும் தொகை ரூ. 2,27,68,507—6—0 என்றும் தெரிவித்திருக்கிறார் அமைச்சர் சுப்பிரமணியம்.

தரப்பட்டமொத்த கடன்தொகை ரூ. 2,72,00,000 ஆகும். எல்லா கடனையுமே ரத்து செய்துவிட முடியாதென்றும், திரும்பத் தர முடியாதவர்களின் நிலைமை அனுதாபத்துடன் கவனிக்கப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பரிசீலிக்கவே இல்லையே!

"கிராம அதிகாரிகளின் அடிப் படைச் சம்பளத்தை நிர்ணயித்து, சர்க்கார் சிப்பந்திகளின் குழந்தைகளுக்கு காட்டப்படும் கல்விச் சலுகைகளையே அக்கிராம அதிகாரிகளுடைய குழந்தைகளுக்கும் தரப்படுவதை சர்க்கார் கவனிக்குமா?" என்ற கேள்விக்கு, அமைச்சர் மாணிக்கவேலர் "இதுபற்றி சர்க்கார் இன்னும் பரிசீலிக்கவே இல்லையே" என்று, கூறியிருக்கிறார்.

பின்னர் எப்போதோ?

"நெய்வேலியில் கைத்தொழில் நகரம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான உத்சேம் எதுவும் தற்போது சர்க்காருக்குக் கிடையாது" என்ற கேள்வி ஒன்றுக்குப் பதிலாக அமைச்சர் பக்தவத்சலம் கூறியிருக்கிறார்.

உயர்நிலைப் பள்ளிக்கு நில நன்கொடை

முத்துப்பேட்டை உயர்நிலைப் பள்ளியின் புதிய கட்டிட நிதிக் குழுவின் கூட்டம், உயர்நிலைப் பள்ளியில், 27—3—55 மாலை 6-30 மணிக்குக் கூடியது. செயலாற்ற திரு ஏ. எஸ்.என்.முகம்மது மைதீன் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், ஜாம்புவானோடை திரு. வ. க. கந்தவேல் அவர்கள் ரூ. 6000 பெறுமானமுள்ள நஞ்சை நிலத்தை கட்டிட நிதிக்கு கொடுத்து உதவினர். அவருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

மறுமலர்ச்சிக் கழக ஆண்டு விழா

காஞ்சியில் ஐந்தாண்டுத் திட்டக் கண்டனம்

காஞ்சியில் திராவிட மறுமலர்ச்சிக் கழக ஆரும் ஆண்டுவிழா 26, 27—3—55 நாட்களில் நடைபெற்றது.

26—3—55 மாலை 6 மணிக்கு தோழர் எஸ். சடையாண்டி தலைமையில, தோழர்கள் இரா. வெங்கடேசன், ஈ. எத்திராசு, புதுவை சிவப்பிரகாசம், டி. கே. சீனுவாசன் ஆகியோர் கழக இலட்சியங்கள் குறித்து சொற்பொழிவாற்றினர்; தோழர்என். கோவிந்தராசு ஆண்டறிக்கை வாசித்தார்; இரவு 9 மணிக்கு தோழர்கள் சி.கே.எஸ். வாசன், கா. வே. முருகேசன் குழுவினர்களால் இன்னிசை நடைபெற்றது.

27—3—55-ல், ஆண்டு விழா நிகழ்ச்சியுடன் ஐந்தாண்டுத் திட்ட கண்டன நாளும் தோழர் சி. வி. எம். அண்ணாமலை தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் காஞ்சி-கல்யாணசுந்தரம், கே. டி. எஸ். மணி ஆகியோர் பேசிய பின், பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள், அரசியலாரின் ஐந்தாண்டுத் திட்டத்தைக் கண்டித்து விளக்கவுரையாற்றினர்.

இரவு 10 மணிக்கு காஞ்சிபுரம், அய்யம்பேட்டை தி. மு. கழகத் தோழர்களால், 'வழக்கு வாபஸ்', 'பரப்பிரம்மம்' நாடகங்கள் நடைபெற்றன. (ந.-நி)

'நம் நாடு' வளர்ச்சிக்கு அன்பளிப்பு

தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள், கடந்த பிப்ரவரி மாதத்தில் கோவை மாவட்டத்தில் சுற்றுப் பிரயாணம் மேற்கொண்டிருந்தபோது, பல்வேறு கிளைக் கழகங்கள், மன்றங்கள், தனிப்பட்டோர் சார்பில், 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கென தரப்பட்ட தொகை விபரங்கள் தரப்படுகின்றன; நன்றியுடன் தொகைகளைப் பெற்றுக்கொண்டோம் —பொறுப்பாளர்.

19—2—55: கோவை சிறப்புக் கூட்டத்தில்:	
வள்ளுவர் மன்றம்	ரூ. 5—1—0
திருமலைசாமியின் குழந்தைக்கு, 'செங்குட்டுவன்' என்று பெயர் வைத்ததற்கு நன்கொடை	1—0—0
சேலம் மாவட்டம் அம்மைகொண்டலம் பட்டி தி. மு. கழகம்	1—0—0
நகர தி. மு. க. செயலாளர் அ. பழனிச்சாமியின் குழந்தைக்கு 'வீரமணி' என்று பெயர் வைத்ததற்கு நன்கொடை	5—0—0
20—2—55:	
கோவை, இராமநாதபுரம் பழனிசாமி—சுமித்திரை திருமண நினைவாக நன்கொடை (செக் மூலம்)	6—0—0
20—2—55 சிதம்பரம் பூங்கா கூட்டத்தின்போது:	
பெருந்துறை சென்னியப்பன் மூலம்	1—0—0
சுந்தராம்பாள் மூலம்	1—0—0
நஞ்சப்பன் மகளுக்கு 'மலர்க்கொடி' எனப் பெயரிட்டதின் நினைவாக	1—0—0
நஞ்சைஉடையாரு தி. மு. க. (15—2—55 நெடுஞ்செழியன் கூட்டத்தின்போது தந்தது —வரவானது)	1—0—0
மேற்படி கூட்டத்தில் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கட்கு பல மன்றங்கள், கழகங்கள் அணிவித்த காலணா மாலைகள், தந்த நன்கொடை மூலம்	33-10—6
தோழர் ஈ. வெ. கி. சம்பத் சேலம் மாவட்ட சுற்றுப்பயணத்தின் போது	5—0—0
21—2—55:	
மேட்டுப்பாளையம் பொதுக் கூட்டத்தில் காளியப்பன் குழந்தைக்கு 'பாண்டியன்' என்று பெயரிட்டதின் நினைவாக	1—0—0
புஞ்சை புளியம்பட்டிக் கூட்டத்தில்	1—0—0
22—2—55:	
குமாரபாளையம் கூட்டத்தில் திருச்செங்கோடு தி. மு. கழகம்	2—0—9
23—2—55:	
ஈரோடு தோழர் தேவராசன் — தோழியர் முத்துக்கண்ணு திருமண நினைவாக	5—0—0
மதுரை மாவட்டம் பழனி வட்டம் தேவாத்தூர் தி. மு. க. அருப்புக்கோட்டை இராமசாமி மூலம்	1—9—3
உடுமலைப்பேட்டை சல்லிப்பட்டி தி. மு. க. கூட்டத்தின்போது திருமூர்த்தி ஆலைத் தொழிலாளர் 101 காலணு	1—9—3
"	2—0—0
வெஞ்சமடை தி. மு. க.	2—8—0
உடுமலை தி. மு. க. 101 அணு	6—5—0
இளகுமுத்து தி. மு. க.	1—9—3
வி. பி சந்தானம் மூலம்	1—0—0
பொன்னுசாமி	1—0—0
புதுமை நாடக மன்றம் 101 காலணு மாலை	1—9—3
24—2—55:	
மூலனூர் தி. மு. கழகக் கூட்டத்தில் சோமுவின் குழந்தைக்கு 'பாண்டியன்' எனப் பெயரிட்டதின் நினைவாக	2—0—0
ஆகமொத்தம்	ரூ. 90-14—3

புதிய பஞ்சாயத்துகள்

இராமநாதபுரம் தாலுகாவில், கீழ்க்கண்ட கிராமங்கள் பஞ்சாயத்துக்களாக சர்க்கார் அங்கீகாரம் பெற்றுள்ளன :—

குரங்கோட்டை, சர்க்கரைக்கோட்டை, புதுமடம், தேவிபட்டணம், வண்ணான்குண்டு, சொதக் சேட்டை, இருமேனி, பெரிய பட்டணம், பேராவூர் காவனூர், ஆத்தங்கரை, பெருவகுளம், பட்டணம் காத்தான், ரெகுநாதபுரம், காஞ்சிரங்குடி.

பரமக்குடி தாலுகாவில், கீழ்க்கண்ட கிராமங்கள் பஞ்சாயத்துக்களாக சர்க்கார் அங்கீகாரம் பெற்றுள்ளன :—

போகலூர், களையூர், வீரவனூர், முதலூர், சாலைக்கிராமம், தாளையடிகோட்டை, கிளியூர், உரப்புளி, முத்துவயல்.

இவைகளில், குரங்கோட்டை, சர்க்கரைக்கோட்டை, புதுமடம், தேவிபட்டணம், வண்ணான்குண்டு, போகலூர், களையூர் கிராமங்களுக்கு 1—5—55 தேதிக்குள் தேர்தல்கள் நடைபெற்று, 1—5—55ல், தலைவர்களும், உறுப்பினர்களும் பதவி ஏற்பார்கள்.

இன்னும் சில மாதங்களுக்குள் 1,000 மக்கள் தொகைக்கு மேற்பட்ட கிராமங்களில் அநேகமாக இராமநாதபுரம், பரமக்குடி, திருவாடானை தாலுகாக்களில் பஞ்சாயத்துக்கள் ஏற்படுத்தப்படுமென்று, இராமநாதபுரம் உதவி பஞ்சாயத்து அதிகாரி அறிவிக்கிறார்.

இந்தோனேஷ்யா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாலும் நான் விரும்பும் மாதிரியான ஆடைகளை உற்பத்தி செய்துதர அவர்கள் ஒப்பு கின்றனர். ஆடைகளின் பாதுகாப்பிற்காக போடப்படும் மேற்கட்டு சிறந்ததாக இருக்கிறது. ஒப்புக் கொள்ளப் பட்ட காலத்தில் ஆடைகளைத் தருவதிலும் அவர்களுக்கு ஒப்புவமை கிடையாது.

“ஆனால் இந்திய ஆலை அரசுகளோ எப்படியோ தங்களுக்குக் காசு கிடைத்துவிட்டது என்றவகையில் திருப்தி கொண்டவர்கள் போன்று நடந்து கொள்ளுகின்றனர்.”

இவ்வாறு இந்தோனேஷ்ய வியாபாரி ஒருவர் சென்னை ‘மெயில்’ நிருபரிடம் கூறியுள்ளார்.

வேறு ஒரு வியாபாரி கூறியதாவது:—

“ஆடை மாதிரிகள் தேவை என இந்திய ஏற்றுமதியாளர்களைக் கேட்டால், வெறும் துண்டுத் துணிகளையே மாதிரியாக அனுப்பி வைக்கின்றனர் —அதுவும் காலம் கடந்து! ஆனால் ஜப்பானிய வியாபாரிகளோ கேட்டவுடன், எதிர் பார்க்கப்படும் காலத்திற்கு முன்பாகவே, அழகான புத்தக வடிவமாக்கப்பட்ட மாதிரித் துண்டுகளை அனுப்பிவைக்கின்றனர்.”

சென்ற மாதத்தில் கல்கத்தாவிலிருந்து இந்தோனேஷ்ய வியாபாரி ஒருவர் ‘ஷெல்லாக்’ வரவழைத்தார். ஒப்பந்தப் புள்ளி பெற்றபோது உயர்ந்த பொருள் அனுப்புவதாக ஒப்புக் கொள்ளப் பட்டது. ஆனால் அனுப்பப்பட்டதோ மட்டரகம். அதைப் பாதுகாக்கப்பட்ட பெட்டியோ அதிலும் மட்டரகம். இவ்வளவுக்கும் மேலாக ஒப்புக்கொள்ளப்பட்ட விலைக்கு மூன்று சத விகிதம் கூடுதலாகவும் கொடுக்க வேண்டியதாயிற்று வியாபார ஒப்பந்தம் செய்து கொண்ட காலத்தில் இருந்த விலை கூடி விட்டதாகவும், ஏறிய விலை ஒப்புக் கொள்ளப்பட்டால் அல்லது வியாபார ஒப்பந்த தஸ்தாவேஜுகளை ஒப்படைக்க முடியாது எனவும் கல்கத்தா வியாபாரி அடம் பிடித்தார்.

விலையேற்றத்தைத் தடுக்க, இறக்குமதி செய்யப்படும் மொத்த மதிப்புத் தொகையை முன்கூட்டியே அரசாங்கத்திடம் செலுத்தி விட வேண்டுமென்று இந்தோனேஷ்ய அரசாங்கத்தால் கட்டுப்பாடு விதிக்கப்பட்டு இருக்கிறது. பொருட்களை ஏற்றுமதி செய்வதில் கப்பல் கிடைக்காத காரணத்தால் தாமதம் ஏற்படுமானால், இந்தோனேஷ்ய வியாபாரி பாதிக்கப்படுகிறார்.

“இந்தோனேஷ்யாவிலிருந்து ஏற்றுமதி செய்வதற்குப் பதிலாக, சிங்கப்பூரிலிருந்து இந்தோனேஷியப் பொருள்களை இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்தால், அப்பொருட்களை இந்தியாவில் குறைந்த விலையில் விற்க முடியும்; நமது இரு நாடுகளும் அதிக நேசமாக இருக்கும் நிலையில், பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளுக்கு, இறக்குமதி பொருட்களில் காட்டப்படும் வரிச் சலுகையை, ஏன் இந்தியா எங்களுக்கும் காட்டக்கூடாது?”

என, அங்குள்ள வியாபாரி ஒருவர் கேட்டதாக நிருபர் அறிவிக்கிறார்.

திருக்குறள் வகுப்பு

2—4—55 பிற்பகல் 2-30 மணிக்கு, சென்னை, பெத்துநாய்க்கன்பேட்டை, முத்துக்கிருஷ்ணன் தெரு, 15-ம் எண்ணுள்ள இல்லத்தில், தாய்மார் கழகச் சார்பில் நடைபெறும். ‘கொல்லாமை’ என்னும் அதிகாரம் பற்றி திரு. மயிலை சிவமுத்து, திருமதி அம்மணி ஆகியோர் பேசுவர்.

பாலாறு தண்ணீர் தகராறு

சென்னை சட்டசபையில் அமைச்சர் விளக்கம்

“சென்னை மாநிலத்திற்கும், மைசூர் மாநிலத்திற்குமிடையே உள்ள ஒப்பந்தப்படி பாலாற்றில் மைசூர் அரசாங்கம் தண்ணீர் விடுகிற ஒப்பந்த அளவுக்குத் தான் அது தண்ணீரைப் பயன்படுத்திக்கொள்கிறதா என்பதை ஆராயவும், இப்பிரச்சினையில் பரிகாரம் தேட வழிகள் கூறவும், பாரபட்சமற்ற முறையில் விசாரணை நடத்துவதற்கெனவும், சென்னை-மைசூர் மாநிலங்களைச் சேராத வெளி மாநிலத்தினரைக் கொண்ட விசாரணைக் குழு ஒன்றை, அரசியல் சட்டத்தின் 263-வது பிரிவுப்படி நியமிக்க வேண்டுமென மத்திய சர்க்காருக்கு யோசனை தெரிவிக்கும் பிரச்சினையை மாநில சர்க்கார் பரிசீலனை செய்து வருகிறது,”

என்று, அமைச்சர் ஆர். சண்முக ராஜேஸ்வர சேதுபதி கூறியிருக்கிறார்.

மைசூர் சர்க்கார், ஒப்பந்தத்தை மீறி, பாலாற்றுத் தண்ணீரை உபயோகித்து வருகிறதென்பது தெளிவாக நிரூபிக்கப்படவில்லை எனவும் அமைச்சர் மேலும் கூறியிருக்கிறார்.

மைசூர் சட்டசபையில் அமைச்சர் விளக்கம்

“பாலாறு தண்ணீர் உபயோகம் சம்பந்தமான ஒப்பந்தத்தை மைசூர் மீறிவிட்டதாக சென்னை சட்டசபையில் தெரிவிக்கப்பட்டது உண்மைதானா? ஒப்பந்தத்தை சென்னை சர்க்கார் தான் மீறுகிறது என்று மைசூர் மாநில மக்கள் கூறுவது அமைச்சருக்குத் தெரியுமா? இப்பிரச்சினை சம்பந்தமாக பிரதிநிதித்துவமுள்ள குழு ஒன்று நியமிக்கப்படுமா? என்பன போன்ற கேள்விகள் கேட்கப்பட்டன.

அவற்றுக்குப் பதிலளித்துப் பேசுகையில் அமைச்சர், “மத்திய சர்க்கார் இது விஷயத்தில் மைசூர் சர்க்காரைக் கலந்தாலோசிக்காமல் எதையும் செய்துவிடாது,” என்றும், அதுபோலவே, “பிரதிநிதித்துவக் குழு அமைப்பதானாலும் மைசூர் சர்க்காருக்குத் தெரியாமல் நடைபெறாது;” என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

சிறப்புக்கூட்டம்

★

சேலம்

பிரபாத் டாக்கீசில்

3—4—55 காலை 10 மணிக்கு

தலைவர்:

எம் பி.சுப்பிரமணியம் எம்.எல்.ஏ.

பேசுவோர்:

இரா. நெடுஞ்செழியன்

சி. பி. சிற்றரசு

நாஞ்சில்மாவட்டத்தில் முன்னணி வீரர்கள் சுற்றுப்பயணம்

★

“தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஏப்ரல் 13, 14, 15 ஆகிய நாட்களில் நாஞ்சில் மாவட்டத்தைச் சேர்ந்த கண்ணன்புதூர், இரவிபுதூர், குளச்சல், இரணியல், ஈத்தாமொழி, நாகர்கோயில் ஆகிய இடங்களிலும், தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் ஏப்ரல் 16, 17, 18, 19 ஆகிய நாட்களில் குளச்சல், கருங்கல், மார்த்தாண்டம், குறத்தியறை, தேரூர் ஆகிய இடங்களிலும் சுற்றுப்பயணம் செய்வார்கள்,”

என்று, நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் வி. எம். ஜான் அறிவிக்கிறார்.

மாயூரம் நகர தி. மு. கழக உறுப்பினர்கட்கு

3—4—55 இரவு 8 மணிக்கு தோழர் பி. டி. ராஜன் அவர்களின் ‘ரெயின்போ ஆர்ட்ஸ்’ நிலையத்தில், மாயூரம் நகர தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது 10—4—55-ல், மாயூரம் முசாபரி பங்களாவில் நடைபெறும் தஞ்சை மாவட்ட தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம், அன்று மாலை நடைபெறும் பொதுக்கூட்டம் ஆகியவை பற்றி ஆலோசிக்கப்படும்.

வடசென்னை குறள் நெறிக் கழகம்

2—4—55 மாலை 6 மணிக்கு, எண் 59, ம. சாமி கோயில் தெரு, (இராயபுரம், சென்னை) மேற்படி கழக அறையில், தோழர் வீரமணி தலைமையில் பல பொருள் குறித்து தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

3—4—55 காலை 10 மணிக்கு, தோழர் கி. தியாகராசன் குறள் வகுப்பு நடத்துவார்.

புதுவை வட்டார தோழர்கட்கு

“புதுவை வட்டாரத்தின் சிற்றூர், பேரூர்களின் தி. மு. கழகங்களை தென்னாற்காடு மாவட்டத்துடன் இணைக்கவேண்டியிருப்பதால், கிளைக் கழகத் தேர்தலையும், மாவட்டப் பிரதிநிதி தேர்தலையும் நடத்தி, முறையே தலைமை நிலையத்திற்கோர் பிரதியும், ‘மாவட்ட காரியாலயம், சிதம்பரம்’ என்ற முகவரிக்கு ஓர் பிரதியும் அனுப்ப வேண்டும்,”

என்று தென்னாற்காடு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஆர். பாலகுருசாமி அறிவிக்கிறார்.

திருமணங்கள்

3—4—55 காலை 9 மணிக்கு, காஞ்சீபுரம், எண் 55, ஆலடி பிள்ளையார் கோயில் தெருவில், தோழர் வேலு—தோழியர் சானகி, தோழர் சு. திருவேங்கடம்—தோழியர் செந்தாமரை திருமணங்கள் தோழர் ஈழத்து அடிகள் தலைமையில் நடைபெறும். பொதுச் செயலாளர் அண்ணாதுரை, தோழர்கள் சி வி எம். அண்ணாமலை, கே. டி. எஸ். மணி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

யுரேனியக் கனிப் படிவங்கள்

இந்திய சர்க்காரின் பூகோள இலாகா அண்மையில் புந்தேல் கண்டிலும், விந்தியப் பிரதேசத்திலும் சர்வே நடத்தியது உண்மை என்றும், சர்வே வேலை தொடர்ந்து நடைபெற்று வருகிறதென்றும், இதுவரை அப்பிரதேசங்களில் ஒரு சில பகுதிகளில் மட்டிலுமே வேலை பூர்த்தியாகியுள்ளதென்றும், அவ்விடங்களில் ‘யுரேனியம்,’ ‘மானஸைட்’ போன்ற கனிப் பொருள்கள் மிகச் சிறிய அளவில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதென்றும், பிரதமர் நேரு மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

* * *

ஆந்திர மாநிலத்தில் ஸ்ரீகாகுளம் மாவட்டத்தில் ‘பெரில’ கனிப் படிவங்கள் இருப்பது பற்றி புதிதாக சமீபத்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது உண்மையென்றும், அப்பிரதேசத்தில் ஒரே ஒரு ‘பெரில்’ கனிப்படிவம் மட்டிலுமே புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதென்றும், அப்பிரதேசத்தில் சர்வே வேலை மும்முரமாக நடைபெற்று வருகிறதென்றும், பிரதமர் நேரு மக்கள் சபையில் தெரிவித்தார்.

திபேத்திற்கு உணவு கடத்தலின் எதிரொலி!

நேபாளத்தில் பட்டினிச் சாவுகள்

அரண்மனைமுன் மலைவாசிகள் முற்றுகை

காட்மண்டு, மார்ச் 31—

ஏறத்தாழ ஆயிரம் மலைவாசிகள் தங்கள் தங்கள் இடங்களை விட்டு வெளியேறி, உணவு தேடி தலைநகருக்கு வந்துள்ளனர்.

தங்கள் பசிப் பிணியைத் தணித்துக் கொள்வதற்காக, மன்னரின் உதவியை நாடி மலைவாசிகள், அரண்மனைமுன் முற்றுகையிட்டுள்ளனர். அவர்களில் ஒருவன், தன்னுடைய கிராமத்தில் மட்டும் பட்டினியினால் பத்துச் சாவுகள் ஏற்பட்டதாகக் கூறினான்.

கிழக்கு நேபாளப் பகுதியில் பட்டினிச் சாவு ஏற்பட்டிருப்பதாக அரசியல் கட்சிகள் சார்பில் அறிவிக்கப்பட்டிருப்பதாக, உள்ளூர் செய்தித் தாள்கள் செய்தி பிரசுரித்துள்ளன. இச்செய்தி அரசாங்கச் சார்பில் மறுக்கப்படவுமில்லை; உறுதி செய்யப்படவுமில்லை.

பட்டினிச்சாவுகள் நேர்ந்திருப்பதாக ஏற்கனவே செய்தித்தாள்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

கிழக்கு மலைப் பகுதியில் பஞ்சம் ஏற்பட்டிருப்பதாகவும், அங்குள்ள மக்கள் உணவு தேடி தங்கள் இடங்களை விட்டுப் பெயர்ந்து செல்வதாகவும் வழிப்போக்கர்கள் முன்பே அறிவித்துள்ளனர்.

ஏராளமான உணவு தானியத்தை, கணவாய்கள் வழியாக திபேத்திற்குக் கடத்திச் செல்லப்பட்டதே, மேற்படி பஞ்சநிலைக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

மாலெங்காவிற்கும் பெரியா கதிதானு?

பிரிட்டிஷ் நிபுணர்கள் யூகம்

சோவியத் ரஷ்யாவின் முன்னாள் பிரதமரான மாலெங்காவ் ஒழித்துக் கட்டப்பட்டார் என்று உலவி வரும் வதந்தியை உறுதிப் படுத்த ஆதாரங்கள் எதுமில்லையென்றாலும், அண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் பல, மாலெங்காவ் ஒழிக்கப்பட்டார் என்று கருதுவதற்கு இடமளிக்கும் வகையில் இருப்பதாக சோவியத் பிரச்சினைகளை குறித்து கணிக்கும் பிரிட்டிஷ் நிபுணர்கள் கருதுகின்றனராம்.

பிரதமர் பதவி வீழ்ச்சிக்குப் பிறகு மாலெங்காவ், உதவிப் பிரதமராக நியமனம் பெற்ற போதிலும், இதர சோவியத் தலைவர்கள் உயர்த்தப்பட்டது போல, மாலெங்காவ் முதல் உதவிப் பிரதமராக பதவி உயர்வு பெறவில்லை — மாலெங்காவ் ‘சுப்ரீம்’ சோவியத்தின் இறுதிக் கூட்டத்திற்கு வரவில்லை—சுட்டன் தேச மின்சார நிபுணர் குழு 18 தினங்கள் ரஷ்யாவிலிருந்தும, ரஷ்ய மின்சார இலாகா மந்திரியான மாலெங்காவைச் சந்திக்கவில்லை — மாலெங்காவ் பிரதமர் பதவி இழந்த பிறகு அவரது சகாக்கள் பலர் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றனர் —மாலெங்காவைப் போல கனரகத் தொழில் அபிவிருத்தியை எதிர்க்கும் சோவியத் தலைவர்கள் மீது ஏவப்படும் கண்டனங்கள் பற்றி பலத்த தணிக்கைக்குப் பிறகும் ஏராளமாக செய்திகள் வெளிவந்துள்ளன—என்பன போன்ற சம்பவங்களை பிரிட்டிஷ் நிபுணர்கள், தங்கள் யூகத்திற்கு ஆதாரமாகக் காட்டுகின்றனராம்!

★

மாலெங்காவ் கொள்கைக்கு அடிமேல் அடி!

மாஸ்கோ, மார்ச் 29—

கனரகத் தொழில் அபிவிருத்திக்கு மாறாக, மக்களின் வாழ்க்கை வசதிக்குத் தேவையான பொருள்கள் உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்ற கருத்துக்கொண்டவர்களை சோவியத் ரஷ்ய அரசாங்கத்தின் அதிகாரபூர்வ இதழான ‘இஸ்வெஸ்டியா’ “பிற்போக்குக் கும்பல் — சந்தர்ப்பவாதிகள் — துரோகிகள்—மக்களின் விரோதிகள்” என்று கண்டித்துள்ளது

“சோவியத் யூனியனின் ஆரம்ப கால வளர்ச்சி சமயத்திலேயே அத்தகைய கருத்து கொண்டோர் தூரத்தப்பட்டுவிட்டனர்,” என்றும் அந்த இதழ் எழுதியுள்ளது.

கனரகத் தொழில் அபிவிருத்தியை எதிர்ப்பவர்களை. ‘பிராவ்டா’ இதழ் தாக்கி எழுதியிருந்ததைப் பின் பற்றி, தொழிற் சங்கப் பத்திரிகையான ‘ட்ரட்’, மற்றும் ‘இஸ்வெஸ்டியா’ என்ற அரசாங்க இதழ்களும் கண்டனங்களைத் தொடுத்துள்ளனவாம்!

என். வி. நடராசனுக்கு ஊராண்மைக் கழக வாழ்த்துரை

27—3—55 மாலை (துறையூர்) கீரம்பூர் ஊராண்மைக் கழகச் சார்பில் தோழர் என். வி. நடராசன் அவர்களுக்கு வாழ்த்துரை ஒன்று வழங்கப்பட்டது. ஊராண்மைக் கழக உறுப்பினர் தோழர் ராமசாமி அவர்கள் வாழ்த்துரையை வாசித்தளித்தார்.

எதிர் நடவடிக்கை!

கராச்சி, மார்ச் 31—

பக்துனிஸ்தான் பகுதிகளை மேற்கு பாகிஸ்தான் மாநிலத்தில் சேர்க்க பாக். சர்க்கார் உத்தேசித்திருப்பதை ஆட்சேபித்து ஆப்கன் தலைநகரான காபூலில் நடைபெற்ற ஆர்ப்பாட்டச் சம்பவங்கள் யாவும் கடுமையானவைகள் என்று பாக். சர்க்காரால் கருதப்படுகிறதாம்.

அவசியம் ஏற்பட்டால் பாகிஸ்தான சர்க்கார், இது விஷயத்தில் உறுதியான நடவடிக்கைகள் எடுக்கத் தயங்காது என்று பாக். அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

நல்ல யோசனைதான்!

“கைத்தறித் துணி அதிகமாக விற்பனை ஆகவேண்டுமானால், அது பெண்கள் மனது வைத்தால்தான் முடியும்; ஒவ்வொரு பெண்ணும் தன் கணவனை ‘கைத்தறித் துணியைக் கட்டாயமாக அணிந்தால்தான் சாப்பாடு தருவேன்; இல்லையெனில் தரமாட்டேன்’ என்று சபதம் எடுத்துக் கொண்டால், கண்டிப்பாகக் கைத்தறித் துணிகள் தேங்கி விடாமல் எல்லோரும் வாங்க முன்வருவார்கள்; இந்த யோசனையைத் தாய்மார்கள் பின்பற்ற வேண்டும்.”

இவ்வாறு அருப்புக்கோட்டையில் நடைபெற்ற கைத்தறி வாரவிழா ஒன்றில் பேசிய இராமநாதபுரம் மாவட்டக் கலெக்டர் ஆர். விசுவாசம் கைத்தறித் துணிகள் தேக்குவதைத் தடுக்க யோசனை கூறும் வகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என் அண்ணாதுரை, எம்.ஏ.